பகல் 12. 14 - 1. 28 வரை 13.04.2000 வியாழன் பின்னிரவு 5. 00 - 6. 20 வரை 16. 04. 2000 ஞாயிறு காலை 6. 33 - 8. 09 வரை காலை 8. 33 - 10.09 வரை.

## இன்று இரதோற்சவம்

[அரியாலை]

மானிப்பாய் மருதடி அருள்மிகு விநாயகர் தேவஸ்தான இரதோற்சவம் இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

மு. ப. 1. 00 மணிக்கு வசந்த மண்டப பூஜை, பஞ்சமுக விநாயகருக்கு விஷேட தீபாராதனை என்பவற்றைத் தொடர்ந்து மதியம் 12. 00 மணிக்கு விநாயகப் பெருமான் இரதத்தில் ஆரோகணித்து அடியார்களுக்கு அருள் பாலிப்பார் நாளை வெள்ளிக்கிழமை காலை 9. 30 மணிக்கு தீர்த்தோற்சவம் நடை பெறவுள்ளது.

[செ-106]

★ ★ ★

(அரியாலை)

நல்லூர் பண்டாரக்குளம் அருள்மிகு பிள்ளையார் தேவஸ்தான இரதோற்சவம் இன்று வியாழக்கிழமை நடைபெறுகிறது.

நாளை வெள்ளிக்கிழமை தீர்த்தோற்சவம் இடம்பெறவுள்ளது.

(செ-106)

## வைரவிழாவும் கலைநிகழ்வும்

(வட்டுக்கோட்டை)

அராலி மத்தி ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தின் வைர விழா நாளை பி.ப. 6.00 மணிக்கு நிலாவொளி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடை பெறவுள்ளது.

மு. விஜேந்திரன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்விற்கு வலி மேற்கு. பிரதேச சபைத் தலைவர் ந. திரிலோகநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

இந் நிகழ்வில் 'சமுதாய நெறி பிறழ்விற்கு காரணம் இன்றைய இளைஞர் யுவதிகள்' என்னும் தலைப்பில் வழக்காடு மன்றமும் 'அரிச்சந்திரா மயான காண்டம்' 'நிம்மதியே இல்லை' என்று நாடகங்களும் நடைபெறவுள்ளன.

(செ-24)

## சகஸ்ரமஹா சங்காபிஷேகம்

(அச்சுவேலி)

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு அச்சுவேலி நாவலம் பதி அருள்மிகு காட்டுமலைக் கந்தசுவாமி ஆலயத்தில் காலை 5.00 மணிக்கு விஷேட பூஜையைத் தொடர்ந்து மு. ப. 10.30 மணிக்கு மூலஸ்தான மூர்த்திக்கு சகஸ்ர மஹா சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது.

பி. ப. 4 மணிக்கு வள்ளி தெய்வயானை சமேதராய் முருகப் பெருமான் பூந்தண்டிகையில் வெளி வீதி உலா வரும் நிகழ்வு இடம் பெறவுள்ளது.

(செ-14)

# புத்தாண்டுச் சிறப்பு மலர்

## புத்தாண்டில் ஜீவகாருண்யம் காப்போம்

எம்மினிய சைவத்தமிழ் மக்களே!

இன்று மங்களகரமான 'விக்கிரமவருஷம்' பிறக்கிறது. 'விக்கிரம' என்றால் ''மேலான நல்லொழுங்கு'' எனப் பொருள் தருகின்றது. உலகஷேமத்துக்கு ஒழுங்குதான் உயிர்நாடியானது. நம் முன்னோர்களாகிய நூலறி புலவோர்கள் எவ்வாறு வாழ வேண்டும் என்று ஆணையிட்ளார்களோ, அவ்வாறே ஒழுகுவதுதான் சீரியவாழ்வியலொழுக்காகும். கொலை, புலை, கள், களவு, காமம் முதலியவற்றை நீக்கி, இறை வழிபாடு, அடியார் சேவை, ஜீவகாருண்யம், எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும் என்ற நல்லெண்ணம் முதலியவற்றை அனுசரித்து வாழ்தலே தலையாயதர்மக்கடனாம்.

இன்றைய வருஷப் பிறப்பு நாளிலே; நமது திருக்கோயில் மணிகளெல்லாம் 'ஆகமார்த்தந்து தேவானாம் கெமணார்த்தந்துமே ராக்ஷஸாம்'

என்ற பிரார்த்தனையுடன் ஒலிக்கட்டும். நாமெல்லாம் ஒன்றுகூடி நம்மைப் பிடித்த பூத, பிசாசு, அரக்கசக்திகள் எல்லாம் விலகிப்போய் விடும்படி'

''மன்னுக தில்லை வளர்க
நம்பக்தர்கள்''
வஞ்சகர் போயகல''

என்றும்,

''மிண்டு மனத்தவர்
போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து
வம் மின்''

என்றும் பல்லாண்டு பாடி வழிபடுவோம்.

'முன்னர் நாம் செய்த பழி பாவங்களைப் போன்று இனி வருங்காலங்களிலே செய்யாதிருப்போமாக' என்ற நல்ல விரதத்தினை இன்றுமுதல் ஆரம்பிப்போம்.

''சென்ற காலத்தின் பழு
திலாத் திறமும்
இனியெதிர் காலத்தின்
சிறப்பும்''

ஆகிய எல்லாம் இன்று நாம் எடுக்கும் இச்சங்கற்பவாயிலாகச் சித்தியளிக்கும். மேலும்'

''லோகா சமஸ்தா சுகினோ பவந்து'' என்பதே எமது திருக்கோயில்களில் நடைபெறும் நித்திய, நைமித்திய பூஜைவழிபாடுகளின் உயர்நோக்கு.

''இன்பமே சூழ்க - எல்லோரும் வாழ்க'' என்று பக்திநலங்கனிந்தபழுத்த சிவனடியார்களின் வாய்வழி வழங்கிவரும் வாழ்த்தும் இதனையே விளக்குகிறது.

'',எல்லோரும் இன்புற்று வாழவேண்டின்; தெய்வ மறை நாவர்களாகிய அந்தணப் பெருமக்களும், மேலுலகவாசிகளாகிய தேவர்களும், சிவவழிபாட்டுக்குரிய பஞ்சகவ்வியங்களைத் தந்துதவும் பசுக்களும்' வேள்விப் பெருப்பயனாகிய நன்மழையும், உலகுயிர்களைக் கண்ணும், ஆவியுமாயிருந்து காக்கும் செங்கோன் றைமையும் ஒழுங்கு- தப்பாதிருக்க வேண்டும்'' இவ்வுண்மையை உன்னியே;

''வாழ்க அந்தணர்
வானவர் ஆயினும்
வீழ்க தண்புனல் வேந்தனு
மோங்குக
ஆழ்க தீயதெல் லாமரன்
நாமமே
சூழ்கவையக முந்துயர்
தீர்கவே''

என அருளுகின்றார் - திருஞானசம்பந்தப் பிள்ளையார்.

''வானம் பொய்க்காது மாதம் மும்மாரி பெய்யவும், வளம்பலவும் திறம்படப் பெருகவும், அன்பு நெறியாகிய சைவநீதி அகிலவுலகமெங்கணும் நின்று நிலவவும் வேண்டின்;

1) நாட்டை ஆளும் மன்னன், செங்கோன்முறைதவறாது ஆட்சி செய்யவேண்டும்
2) குடிமக்கள், தமக்குள்ளே எவ்வித பகைமைகளுக்குமே இடங்கொடாது அன்பு நெறி

(9ஆம் பக்கம் பார்க்க)

சைவப்புலவர்.
ஏ. அனுசாந்தன்
குப்பிழான்

தொடர்ந்து இயங்கி வரும்
கோறல் ரேஸ்ரி
CORAL TASTY
ஸ்தாபனத்தார்
தமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் தமது சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றனர்.
நெல்லி ரசம்
ஜாம்
ஊறுகாய்
அரிசிமா
கோடியல்
ICING SUGAR
எங்கும் கிடைக்கும்.
TASTY FOOD INDUSTRIES (PVT) Ltd
ADIAPATHAM ROAD,
THIRUNELVELY.
(கி/196)

புத்தாயிரமாம் ஆண்டில் வரும் புதிய வருஷத்துடன் மக்கள் நிம்மதியாக வாழ எமது வாழ்த்துக்கள்.
எம்மிடம்
சகல விதமான பெயின்ட் வகைகளும் பல விதமான கட்டிட பொருட்களும் சுண்ணாம்பும் விற்பனைக்கு உண்டு.
நீங்கள் நாட வேண்டிய இடம்.
VELMURUGAN
TRADERS
வேல் முருகன்
வணிக நிலையம்
56, A, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(கி/188)

புத்தாயிரம் ஆண்டின் விக்கிரம வருஷமே வருக வருக
மக்கள் அமைதி சந்தோஷம் பெற்று வாழ வாழ்த்துகிறோம்.
★ தரமான போட்டோ ஸ்ரப் பிரதிகள்
★ அடையாள அட்டை கவரிடுதல்
★ 61 வருட அனுபவ றைகிளீனர்ஸ்
இம் மூன்றும் இணைந்த சேவைகளை ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள நாடுங்கள்.
சன்லைற் றைக்கிளீனர்ஸ்
பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.
சன்லைற் மல்ரி-சேவிஸ்
தொலைத் தொடர்பு சேவை
நச்சேரியடி, யாழ்ப்பாணம்.
T. P. 2741 (கி185)

புத்தாயிரம் ஆண்டிலே
புது மணம் கமழ வரும்
புது வருஷத்தில்
புதுமை பெற்று
மக்கள் நிம்மதி பெற்று
மகிழ்ச்சியுடன் வாழ
★ வாழ்த்துகிறோம். ★
★ புத்தம் புதிய மோட்டார் சைக்கிள்கள்
★ மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள்
★ ஜெனறேற்றர் வகைகள்
★ சோலார் வகைகள்
★ தரமான அசிட் வகைகள்
அத்தனைக்கும் நாடவேண்டிய மிகப் பிரசித்தி பெற்ற இடம்
அருள் விநாயகர் மோட்டோர்ஸ்
ARUL VINAYAKAR MOTORS
இல: 103, 106 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
கிளை: அருள் விநாயகர் மோட்டோர்ஸ்
262 கண்டி வீதி,
சாவகச்சேரி.
(கி-187)

புத்தாயிரம் ஆண்டிலே புது மணம் கமழ பிறக்கும் விக்கிரம வருஷமே வருக! வருக!!
மக்கள் அமைதிக்கு இறைவனை பிரார்த்திக்கிறோம்.
நவ நாகரீக நங்கையர் விரும்புவது
புதிய புதிய டிசைன்களில் வடிவமைக்கப்பட்ட ஆபரணங்களை அதற்கோர் சிறந்த இடம்.
'வினோ நகைப்பூங்கா'
22 கரட் தங்கத்தில் நகைகள் குறித்த காலத்தில் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்
நாடி வாருங்கள்!
வினோ நகைப் பூங்கா
185, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T. P. 2824 (கி-189)

புத்தாயிரம் ஆண்டு புது வருடத்தில் மக்கள் நிம்மதியாக வாழ இறைவனை வேண்டி நிற்கும்
"வேணுகா"
தொலைத் தொடர்பகம்
உங்கள் உற்றார், உறவினருடன் உரையாட நாட வேண்டிய இடம்
அமைதியான சூழல், குறைந்த கட்டணம்
உள்நாடு: 021-2541, 021-2845
வெளிநாடு: 0094-21-2541, 0094-21-2845
பக்ஸ் வசதியும் உண்டு
போட்டோ ஸ்ரற் பிரதிகள், வீடியோ கசெற் கொப்பிகள் பெற்றுக் கொள்ளலாம்.
★ உங்களுக்கு வரும் அழைப்புகள் உடனுக்குடன் அறியத் தரப்படும்.
T. p. 021-2616
79, பத்திரகாளி கோவிலடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.
(கி/184)

# புத்தாண்டுச் சிறப்புமலர்


புத்தாயிரம் ஆண்டின் புது வருஷமே
வருக வருக
இறைவன் திருவருள் பெற்று
மக்கள் [illegible] வாழ்த்துகிறோம்.



யாழ் நகரில் பெயர் பெற்ற
மூக்குக் கண்ணாடி விநியோகஸ்தர்கள்

**"எரிக் கணேஷ்"**

மேலும்
★ மருந்து பல்பொருள் விற்பனை
★ மிதக்கும் பற்களுக்கு கிளிப் போடுதல்
★ பல் கட்டுதல்
★ உள்நாட்டு, வெளிநாட்டுத் தொலைத் தொடர்பு வசதிகள் என்பன ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

தூர இடங்களில் இருந்து வருபவர்களை உடன் கவனிக்கப்படும்.

564, 566, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(கி/196)


## சித்திரை வந்தது

சத்திய வேள்வியின்
சாதனை பார்த்திட
நித்தமும் அழுதிடும்
மக்களைக் காத்திட
புத்தகம் திறந்திட
பூமியும் மகிழ்ந்திட
முட்களும் கற்களும்
முகவரி தொலைத்திட
காதலும் தென்றலும்
கனவுகள் தொலைத்திட
சித்திரை வந்தது
சித்திரை வந்தது.

வேலணையூர்.பாலா

## நாளை புதுவருடவிழா

(மந்திகை)

வடமராட்சி கல்வி திணைக்களம் நடாத்தும் புத்தாயிரமாம் ஆண்டு புதுவருட விழா நாளை 14 திகதி வெள்ளிக்கிழமை புலோலி அமெரிக்க மிசன் கல்லூரியில் கல்விப்பணிப்பாளர் சி. சிவராசா தலைமையில் நடைபெறும்.

அன்றைய தினம் பாடசாலை மாணவர்களுடைய கலைநிகழ்ச்சிகளும் நடைபெறும் இடம்பெறும். (க-23)

## புத்தாண்டில்

யிரே வாழவேண்டும்

3) அந்தணர்கள், வேதாகமங்களிலே விதித்தபடி வேள்வி, யாகங்களைச் செய்து வருதல்வேண்டும்'' என்பது கச்சியப்ப சிவாச்சாரிய சுவாமிகள் தருஞ் செய்தி.

''வான்முகில் வழாது பெய்க
மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறையரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்''

என்பது அவர் பாடல். இத்திருப்பாட்டில் அரசர், அந்தணர், குடிமக்கள் ஆகியயவரது கடமைகளும் விளக்கப்பட்டிருத்தலை காணலாம்

ஒவ்வொருவரும் தத்தம் கடமைகளை ஈஸ்வரார்ப்பணமாகச் செய்துவருவதனையே எமது சமயம் வலியுறுத்துகிறது. இவ்வாறு செய்துவரின் உலகம் ஒழுங்காக இயங்கும் எனவே,

இன்றைய 'விக்கிரம' வருஷப்பிறப்பு நன்னாளிலே இத்தகைய நல்ல பிரார்த்தனைப் பாடல்களின் பொருளை யுணர்ந்து மெய்யன்புடன் ஓதி, எல்லாவுயிர்களும் இன்புற்றிருக்க இறையருளை இறைஞ்சுவோமாக.

சிவசிவ


புத்தாயிரம் ஆண்டில் வரும்
விக்கிரம வருஷத்தில்
மக்கள் நலம் பெற வாழ்த்துகிறோம்

⁜ அன்றும் இன்றும் தித்திக்கும் தேன்சுவை ஐஸ்கிறீம் மற்றும் குளிர்பானங்கள்
⁜ ஐஸ்கிறீம் தயாரிப்பிற்கு முதல்தரமான பால்மா, சீனி மற்றும் உலகப்புகழ் பெற்ற இலண்டன் 'புஸ்கோக்' கம்பனியினரின் உணவுத் தயாரிப்பிற்கெனவே தயாரிக்கும் கைமுறைகளை மட்டுமே பயன்படுத்துதல்.
⁜ சுத்தம் சுகாதாரம் பேணப்படுதல்.

இவை அனைத்தும் இன்று வரை நாம்
★ நிலைத்து நிற்கும் காரணங்கள் ★
தரம் நாடுவோர் தவறாது நாடுமிடம்

**ராஜா கிறீம் ஹவுஸ்**

இல: 36, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

இல; 64, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(கி-1?7)

எமது அன்பான
வாடிக்கையாளர்களுக்கு புத்தாயிரம் புதுவருட வாழ்த்துக்கள் உரித்தாகுக.

**உலகெங்குமுள்ள**

உற்றார் உறவினர் நண்பர்களுடன்
தொலைத் தொடர்பு கொள்ள நாடுங்கள்.

**ஸ்ரீ முருகன்**
**தொலைத் தொடர்பு சேவை**

- இரவு -பகல் சேவை
- பக்ஸ் (Fax) வசதிகள்
- போட்டோ ஸ்ரற் சேவை
- லெமனேற்றிங் டைப்பிங் சேவை

T. P. 021-2670
021-3214
FAX. 021-3214
303, கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

T. P. 070-212472
FAX. 021-3214
சிவன் கோவில் வீதி,
காரைநகர்.

SALE! SALE!! SALE!!!

(கி/191)

SURIYA CHINESE
167, KASTHURIAR ROAD,
JAFFNA.

எம்மிடம் தரமான உணவு வகைகள்
பெற்றுக்கொள்ள இன்றே
நாட வேண்டிய இடம்.

எமது தயாரிப்புகள்
★ சிக்கன் புரியாணி
★ மட்டன் புரியாணி
★ மரக்கறி புரியாணி
★ சிக்கன் நூடில்ஸ்
★ மட்டன் நூடில்ஸ்
★ முட்டை நூடில்ஸ்
மற்றும்!

(ஸ்பெசல்)

"பாலாண்டி"
"சூப்வகைகள்"

உங்கள் ஓடர்கள் விசேஷமாக
கவனிக்கப்படும்.

(கி/195)

நெஞ்சக் கருத்தின் நிலையறிவித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனையாண்ட
காரைநகர் - வாரிவளவு
கற்பக விநாயகர் நின் அடி சரணம்
புத்தாண்டு நன்நாளில் எமது வாடிக்கையாளர்கள்
அன்பர்கள், நண்பர்கள் அனைவர்க்கும்
உளம் கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்.

மனங்கவர் டிசைன்களில்
முகூர்த்தப் பட்டுப் புடவைகள், கூறைச் சேலைகள்
பட்டு வேட்டிகள், மங்கையர், ஆடவர்க்கான
நவீனரக சாறி, சூட்டிங், சேட்டிங்
சிறுபிள்ளைகளுக்கான ஆடை வகைகள்
அனைத்தும் மலிவு விலையில் பெற்று
புதுவருஷம் கொண்டாட நாடுங்கள்.

**கணேசன் பட்டுச் சோலை**

201, காங்கேசன்துறை சாலை, யாழ்ப்பாணம்.

(கி/201)

மலரும் இனிய புத்தாண்டில்
அன்பர்கள், ஆதரவாளர்கள்,
வாடிக்கையாளர்கள்
அனைவர்க்கும்
எமது உளம் கனிந்த புத்தாண்டு
வாழ்த்துக்களை தெரிவிப்பதில்
மகிழ்ச்சியடைகிறோம்.

R. P. N. ஆர். பி. என். காட் வெயர்
கண்டி வீதி, சாவகச்சேரி.

(கி/208)

# புத்தாண்டு சிறப்புமலர்

விக்கிரம புத்தாயிரம் ஆண்டில்
எமது வாடிக்கையாளர்கள் அன்பர்கள்
ஆதரவாளர்கள் அனைவர்க்கும்
எமது உளம் கனிந்த

நல்வாழ்த்துக்கள்

R. M. S

கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (க-209

மலரும் விக்கிரம ஆண்டில்
அடியெடுத்து வைக்கும்
இவ் இனிய வேளையில்
எமது அன்பர்கள், ஆதரவாளர்கள்,
வாடிக்கையாளர்கள்
அனைவரையும் நினைவுகூர்ந்து
வாழ்த்துகின்றோம்

செல்வா காட்வெயர்ஸ்

120 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(கி-220)

மலரும் சித்திரை விக்கிரம புத்தாண்டில்
அன்பர்கள்
ஆதரவாளர்கள்
வாடிக்கையாளர்கள்
அனைவர்க்கும்
எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்

சரவணாஸ் பாட்டா

கஸ்த்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
(கி-226)

இன்று பிறக்கும் இனிய புத்தாண்டில்
எமது வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள்
அனைவர்க்கும் எமது இதயங்கனிந்த
புத்தாண்டு வாழ்த்துக்கள்

சிறீகுமரன்

83, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.
(கி-223)

## சிவத்தமிழ் அன்னையின் புத்தாண்டு வாழ்த்துச் செய்தி

அன்னை அபிராமி அருள் கொண்டு அகிலமெங்கும் அன்பே நிறைக நிர்க்கதியுள்ளவராய் இம்மாநிலத்தில் நம் மாந்தர் வாழ்ந்திடல் தகுமோ? வாழ் வாழவிடு என்பதாக எம் வாழ்வு ஏற்றம் பெற்றிடட்டும் அன்பே சிவம், அன்பே உலகம், அன்பே வாழ்வு எனும் உயரிய இலட்சியம், குறிக்கோள் எம் உள்ளத்து அடித்தளத்து உறைந்திடட்டும், நிலைத்திடட்டும் அனைத்து ஆனந்தமும் பேரருள் நாயகியாம். எம் அன்னை தருவாள் பெறுவோம் பேரின்பம், நித்யஇன்பம்.

சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி
**தங்கம்மா அப்பாக்குட்டி**
தலைவர் ஸ்ரீ துர்க்காதேவி
தேவஸ்தானம்தெல்லிப்பளை

### புத்தாண்டு வாழ்த்துச்செய்தி

ஒவ்வொரு முறையும் நாம் எதிர்பார்த்து ஆவலோடு எதிர்கொள்ளும் புத்தாண்டில்பல அபிலாஷைகளை பூர்த்திசெய்ய முனைகிறோம். எத்தனையோ விதமானஇடர்கள்சோதனைகள் நமக்கு ஏற்பட்ட வண்ணமாகவே இருக்கின்றன. பகவான் கீதையில் சொன்ன பிரகாரம் இவை எல்லாம் கர்மபலனே ஆகும். துன்பங்கள் அடிக்கடி வர நமக்கு மிகவும் தேவையானது தெய்வகடாட்ஷம் இத் தெய்வகடாட்ஷத்தை மேலும் பெருக்க தர்ம நெறியையே மிகவும் ஊக்கமாக கடைப்பிடிக்க இவ்வருடத்தில் சங்கற்பம் செய்வோமாக. எந்த சந்தர்ப்பத்திலும் தர்மநெறியில் பிசகாமல் வாழநாம் முனைவோம்.

சுவாமி சித்ரூபானந்தா

### தபால் பொதிகள் வந்தன

நேற்று முன்தினம் காங்கேசன்துறை வந்தடைந்த 'லங்கா முடித்த' கப்பலில் ஆயிரத்து 225 தபால் பொதிகளும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க கப்பலில் 95 தபால் பொதிகளும் எடுத்து வரப்பட்டன.

இதேவேளை இங்கிருந்து 49 தபால் பொதிகள் இங்கிருந்து கொழும்பிற்குநேற்று அனுப்பி வைக்கப்பட்டது.

(ந)

இன்று பிறக்கும் விக்கிரம சித்திரைப்
புத்தாண்டில் எமது அன்பர்கள், ஆதரவாளர்கள்
வாடிக்கையாளர் அனைவர்க்கும்
எமது இதயம் கனிந்த
நல்வாழ்த்துக்களை தெரிவிப்பதில்
மகிழ்ச்சியடைகிறோம்

வெங்கடேஸ்வரா

79, கஸ்த்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-225)

மலரும் சித்திரைப் புத்தாண்டில்
எமது வாடிக்கையாளர்கள், அன்பர்கள்.
ஆதரவாளர்கள், அனைவர்க்கும்
எமதுபுத்தாண்டு வாழ்த்துக்கள்

குகன் ஸ்ரோர்ஸ்

18‥, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-227)

எமது அன்பர்கள் ஆதரவாளர்கள்
வாடிக்கையாளர் அனைவர்க்கும்
எமது சித்திரைபுத்தாண்டு வாழ்த்துக்களை
தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.

மதுஷன் ஸ்ரோர்ஸ்

சந்தைலேன், உடுப்பிட்டி.
(கி-243)

ஆதரவாளர்கள் வாடிக்கையாளர்கள அனைவர்க்கும் சித்திரைப் புத்தாண்டில் வளமுடன் வாழ மருதடி தேரேறி அருட்காட்சி வழங்கும் ஐங்கரன்பாதம் பணிந்து எமது வாழ்த்துக்களைத் தெரிவித்து கொள்கிறோம்

சிறீ நதியா நகைமாடம்

2 G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
கிளை 56, கஸ்த்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

சிறிரூபா நகைமாளிகை

131, கஸ்த்தூரியார் வீதி யாழ்ப்பாணம் (கி-245)

ஆதரவாளர்கள் வாடிக்கையாளர்கள்
அனைவர்க்கும்
எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்

சிற்றி ஹாட்வெயர் அன் ஸ்ரோர்ஸ்

பிரபல கட்டட பொருள் விற்பனையாளர்கள்

55, 57, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(கி/246)

கைவேல்களிற் றொரு
போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்
-குறள்

# வலம்புரி

## புதுவருடம் பிறக்குது

இருக்கும் தலையிடிகள் தொலையப் புது வருடம் பிறக்கிறது என்று மக்கள் உளங் கொள்ள லாமா என்றால் செல் சத்தங்களும், குண்டு வீச்சுக்களும் சூட்டுச்சத் தங்களும் கட்டியங் கூறி நிற்பது கவலை போக்க வா? கண்ணீர் பெருக்க வா என்ற ஏக்கம் முளை கொள்கிறதே.

இந்த மண்ணிலே பொங்கல் வருகிறதென் றால் வெறும் பானை பொங்குவது போல் உள் ளங்கள் பொங்குவ தில்லை. அதே போல அனாத்த மாப் பானை யுடனும், அரைவயிறு உணவுடனும் ஓடி ஓடி அவலப்பட்ட கடந்த காலங்களை நினைக்கும் போது நெஞ்சம் பற்றி எரிகிறது; எங்கள் பூமி சபிக்கப்பட்ட நிலமா? பாவிகள் புகலிடமா? கண் ணீர் உகுக்க கண்களிலும் நீர் இல்லையே?

சுற்றம் தொலைத்து சுமை மிகுந்த வாழ்வை நகர்த்தும் எமக்கு ஒரு விழாவா? அந்தவேளை யில் அவலப். படும் எம்மவர் இழவும் நிகழ லாம். இன்னலும் பெரு கலாம் நிலைதடுமாறும் உள்ளத்தொடு வருடப் பிறப்பினை அணைக்க முடியுமா.?

வருடப்பிறப்பு விழா பெரிதன்று பேணிக் காக்க வேண்டிய தன் மான வாழ்வு தழைக்க நிகழுகின்ற எல்லாம் நிம்மதியை தரத்தான் வேண்டும்- ஆனால் காலம் கடிதே நீள்கி றதே- புலரப்போகும் சுதந்திரம் தூரம் தொடு வானமாகக் கூடாதே. உள்ளதைக் கொடுக்க ஊனுத்தத் தனமா? அர சியல் விவேகம் போதாத நிலையா? சுயநிர்ண யத்தை கொடுத்து இன அமைதியை பேணு வதற்கு.

நாங்களும் மனிதர்கள் என்பதை ஒரு சுற்றில் உள்ள அறுபது வருடங் கள் வந்து போனாலும், கண்டுபிடிக்க முடியுமா? அத்தனை காலத்திற்கும் நாங்கள் தாக்குப் பிடிக்க முடியுமா? தாங்க முடியுமா? என்று தவிக் கும் உள்ளத்தினரையே காணமுடிகிறது.

இலைகள் உதிர்த வெற்றுமரங்கள் போல- வெறிச்சோடிய புறக் கோலம்- வெறிச்சோ டிய வறிய உள்ளங்கள் புன்னகை உதிர்க்க என்று வரும் புத்தாண்டு. பகையில்லா- அழிவில் லா- நிணச்சேறு காணா நிலை மலருவ தெப் போது?

-அன்புடன் ஆசிரியர்

இடர்பாடுகள் நீங்கி

# சாந்தி, சமாதானம் நிலவிட புத்தாண்டில் பிரார்த்திப்போம்

## யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

உலக மக்கள் மத்தியிலும், இலங்கை மக்கள் மத்தியி லும் மனித நேயம் உருவாகி இடர்ப்பாடுகள் விலகவும் அமைதி உருவாகவும் புத் தாண்டு தினத்தில் பிரார்த் திப்போமாக.

யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை புத் தாண்டு தினத்தை ஒட்டி விடுத்த செய்தியில் மேற் கண்டவாறு தெரிவித்துள் ளது.

அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கலியுகம் 5102 சித்திரைப் புத்தாண்டை சமாதானத் துக்கும் அமைதிக்குமான பிரார்த்தனைக் காலமாக வர வேற்போம்.

தினசரிவழிபாட்டிலும், வெள் ளிக்கிழமை விரத வழிபாட்டி லும், விசேட பிரார்த்தனைக் காலங்களிலும், மனிதநேயத் தையும், அயல்வர்களுடன் அன்பையும், அயல்மொழி யாருடன் மொழி வளத் தொடர்பையும் உருவாக்கு வதன் மூலம் உலகின் பொது நிலையையும் சாந்தியும் சமா தானமும், சகோரதத்துவ மும் நிலை பெற வேண்டுதல் செய்வோம்.

இடர்படும் மக்கள் சேவை யில் ஆலய நிர்வாகிகள் முன்வந்து தொழிற் படுவதுடன் இதற்கு உதவியாக சகல இந்து இளை ஞர் மன்றங்களும், இந்து சமய நிறுவனங்களும், சமய குருமார்களும் வழி காட்டு தல் சிறப்புடையதாகும்.

பாதிப்புற்ற மக்கள் இடர் விலகும் அமைதிப்பிரார்த்த னைகளில் தொடர்ந்து தவ றாது கலந்து கொள்க. பசு வினைப் பொருளாதாரத்தை விருத்தி செய்து பசுவினப் பாதுகாப்பை உறுதிப்படுத் துக.

தருமநிதிகள் மூலம் தர்ம சேவைகளை விரிவாக்கவும், பாதிப்புற்றமக்கள்சேவையை கிராம ரீதியாக விரிவுபடுத் துக. இந்து அறநெறிப்பாட சாலைகளை தவறாது சகல கிராம சேவையாளர் பிரிவுக ளிலும் ஆரம்பிக்குக. வெள ளிக்கிழமை விரத வழிபாடு சிறக்க சகல துறைசார் ஊழி யர்களும் தவறாது கலந்து கொள்க.

இவ்வாறு அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

### பாராட்டும் பரிசளிப்பும்

(யாழ்ப்பாணம்)

க. பொ. த சாதாரண தரப் பரீட்சையில் அதி கூடிய புள்ளிகளைப் பெற்ற திருநெல்வேலி மேற்கு காளி கோவிலடி உள்ளிட்ட பகுதி மாணவர்களை பாராட்டி பரிசு வழங்கும் நிகழ்வு ஒன்று இன்று மாலை நடை பெறவுள்ளது.

திருநெல்வேலி காளி கோவிலடி சனசமூகநிலையப் போஷகர் இ. பிரபாகரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தி னர்களாக முன்னாள் கல்விப் பணிப்பாளர்கோ. சி' வேலா யுதம் முன்னாள் கொக்கு வில் இந்துக்கல்லூரி அதிபர் இ. மகேந்திரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (வ)

### விசேட வகுப்பு

பலாலி ஆசிரியர் கலா சாலை ஆங்கில மொழியினருக் கான விடுமுறைகால விசேட உளவியல் வகுப்பு நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. [க-39]

## பஸ் குண்டுவெடிப்பு சூத்திரதாரி தமிழர் பொலிசாரினால் கைது?

(கொழும்பு)

குருநாகல் களுவத்தை பிரதேசங்களில் அண்மைக் காலங்களில் இடம்பெற்ற பஸ் குண்டு வெடிப்பின் சூத்திர தாரி எனக் கருதப்படும் தமிழ் இளைஞர் ஒருவர் சந் தேகத்தின் பேரில் விசேட பொலிசாரினால் கைதுசெய் யப்பட்டுள்ளார்.

நீர்கொழும்பில் நகைக் கடை உரிமையாளரான கந் தன் என்பவரே கல்முனை பாண்டியிருப்பில் வைத்து நீர்கொழும்பிலிருந்து சென்ற விசேட பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். தொடர்ந்து அவர் விசாரிக் கப்பட்டு வருவதாகவும் தெரியவருகிறது. (வ)

## மீறிகானப் பகுதியில் தேடுதல் நான்கு தமிழர்கள் கைதாகினர்

கொழும்பிலுள்ள மீறிகா னப் பகுதியில் தலமத்பிட் டிய என்ற இடத்தில் நேற் றுத் தேடுதல் நடத்திய பொலிஸார் 4 தமிழர்களைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப் பட்டவர் கள் மீறிகானப் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக் கப்பட்டுள்ளனர்.

1992 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16 ஆம் திகதி கடற் படைத்தளபதி வைஸ் அட்மி ரல் கிளான்சி பெர்னான்டோ வைக் கொலை செய்வதற் குப் பின்னணியில் நின்று செயற்பட்ட ஒருவரும் கைதா கியுள்ளதாக மீறிகானப் பொலிசார் தெரிவித்துள்ளார் (ச)

### வரம் அருள்வாயே

எடுப்பு

மருதடி நாயகன் மலரடி தொழுதால்
விரும்பிடும் செல்வம் விளைந்திடுமன்றே

தொடுப்பு

அரும்பினில் மாலைகள் தொடுத்துமே தொழுதால்
கரும்பென வாழ்வு இனித்திடுமன்றே

முடிப்பு

மருதொடு நெல்வயல் மாவொடு வேம்பதும்
சுருதியாய் சூழ்ந்துமே துதிப்போர்க்கிதம் தர
அருகினில் நின்றுமே அனைத்திடும் ஐங்கரா
வருவினை காத்துமே வரமருள் வாயே

கவிஞர் .துரையர்

இன்று மருதடி விநாயகர் தேர்த்திருவிழா அதனை யொட்டி இப்பாடல் இடம் பெருகிறது.

## மெய்வல்லுநர் போட்டிகள்

(அரியாலை)

அரியாலை காந்தி சன சமூக நிலையத்தின் பொன் விழாவையொட்டி எதிர்வ ரும் 14, 15, 16, 17 ஆகிய நான்கு தினங்களுக்கு பகல் மெய்வலலுநர் போட் டிகளும் இரவு கலை நிகழ்வு களும் கவியரங்குகள், கருத்த ரங்குகள், பட்டி மன்றம்ஆகிய யவை நடத்தப்படவுள்ளன.

இவ்விழாவின் சிறப்புப் போட்டியாக ஆண்கள் பெண்களுக்கானசைக்கிள் ஓட்டப் போட்டிகளும்நடத்த ஏற்பாடாகியுள்ளன (க-84)

## மாட்டு வண்டில் சவாரிப் போட்டி

(அரியாலை)

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத் தும் மாபெரும் மாட்டு வண் டில் சவாரிப் போட்டி இன்று வியாழக்கிழமை பி ப. 1. 30 மணிக்கு நீர்வேலி சவாரித் திடலில் நடைபெற வுள்ளது. (செ-106)



## சாயி அருளமுதம்

### புதுமை

புதிய வருடத்திற்காகக் காத்திருக்க அவசிய மில்லை. ஒவ்வொரு கண மும் கூடப் புதுமையானது தான். அதனால் ஒவ்வொரு க்ஷணமும் இதயம் மலர வேண்டும். மனமும்படிப்படி யாகமலாத்து வங்கும். இது தான் புதிய வருடத்துக்கு உண்மையான அர்த்தம். புதிய வருடம் என்ற பெயரில், பலமான விருந்தைச்சாப்பிட்டுவிட்டு, உறங்கி எழுந்து வேட்டைக்குப் போவது என்பதல்ல. இப்படி வயிறு நிறைய சாப்பிடுவதற்குப் புதுவருஷம் வரை காத்திருக்க வேண்டுமா? யுகாதி என்றால் என்ன? யுகங்களுக்கு எல்லாம் ஆதி, முதலாவது எனப் பொருள். அவன்தான் மனிதன்! அத்தகைய மனிதனு டைய இயல்பைப் புரிந்து கொள்ள முயலவேண்டும். மனிதர்களுக்கு இடையே இருக்கும் வித்தியாசங்களை விவேகத்துடன் அலசி ஆராய வேண்டும். நான் யார்? என்ற கேள்வியைக் கேட்டுக்கொள்வதன் மூலம் தன் இயல்பைப்புரிந்து கொள்ள இயலும். நான் இன்னார், இந்த இடத்தைச் சேர்ந்தவன் என்று அறிமுகப்படுத்திக் கொள்வதெல்லாம் உடலைப்பற்றிய அடையாளம் காட்டவதற்குத்தானே. தவிர, மனிதனின் உண்மை யான இயல்பான ஆத்மாவை குறிப்பிடுவதல்ல. அந்த ஆத்மாதான் நான்! என்று புரிந்து கொள்ளவேண்டும். அன்பின்வடிவங்களே!

பாபா



## தவக்கால சிந்தனை

### 37 ஆம் நாள்

உண்மையைப் பேசி உத்தமனாய் வாழ்பவனை உலகம் மதிக்கும். ஆனால் இன்றைய சூழ்நிலையிலே உண்மைக்கு இன்று காலம் இல்லை உண்மை எங் கேயோ மாயமாக மறந்துவிட்டது. உண்மைக்காக போராடுபவர்களை இன்றைய உலகம் கோழை என இகழ்கிறது வாழத் தெரியாதவன் என்று எள்ளி நகை யாடுகிறது. இவ்வாறான நிலைகள் இன்று மட்டுமல்ல மாறாக யேசு வாழ்ந்த காலத்திலும் காணப்பட்டது. உண்மையை அன்பு செய்து தவறினை மன்னியுங்கள் என்ற வார்த்தைக்கு ஏற்றவாறு வாழ்ந்த யேசுவின் போதனையை வெறுத்துத் தள்ளினர். இறை வார்த் தையை கடைப்பிடிப்போர் என்றுமே சாவது இல்லை. அவர்களுக்கு முடிவில்லாத வாழ்வு உண்டு என்ற உண்மையை எடுத்துக்கூறிய யேசுவை பேய்பிடித்த வள் என்று தூற்றினர். ஆபிரகாம் தோன்றுவதற்கு முன்பே இறைமகள் யேசு இருக்கிறார் என்ற மறை உண்மையை அவர் கூறியபோது அவரது வாழ்வையே முடிக்க திட்டம் திட்டினார்கள் அன்று வாழ்ந்த யூதர் கூட்டம் ஆனால் உண்மையில் உன்னத நாயகனாக விளங்கிய யேசு எதனையும் பொருட்படுத்தாமல் உண்மைக்காக போராடி தன் உயிரையே தியாகம் செய்தார். தவக்காலத்திலே யேசுவின் பாடுகளை மட்டும் தியானித்தால் போதாது மாறாக எம் மனங் களை மாற்றி மறு கிறிஸ்தவர்களாக வாழவேண்டும். எனவே உண்மைக்கு சான்று பகரும் கருவிகளாக வாழ உயிர் உயிர் உள்ள தேவனிடம் வரம்வேண்டு

அருட் சகோதரி அமலி
தாளையடி

# கற்பிட்டிகடலில் புலிகள் - கடற்படை மோதல்

# கடற்படைவீரர் 1வர்பலி 3பேர்காயம்

# புலிகள் படகு நிர்மூலமானது

(புத்தளம்)

கற்பிட்டிக் கடற் பகுதியில் நேற்றுக்காலை ரோந்து சென்ற கடற்படையினருக்கும் கடற்புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் கடற்படையினரின் படகு பெருஞ்சேதமடைந்ததுடன் கடற்படை வீரர் ஒருவர் பலியாகியும் மூவர் காயமடைந்தும் உள்ளனர். காயமடைந்த கடற்படையில் மூன்றுபேரும் புத்தளம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இம்மோதல் சம்பவம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் நேற்று காலை புலிகளின் படகுகள் என்ற சந்தேகத்தின் பேரில் தாக்குதல் இடம் பெற்றதாகவும இச்சம்பவத்தின்போது கடற்படையினரின் படகு சிறிது சேதத்திற்குள்ளானதென்றும் கடற்புலிகளின் படகுகள் நீர்மூலமாக்கப்பட்டதாகவும் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கற்பிட்டி கடல் பிரதேசத்தில் கடற்கரும்புலிகள் கடற்படையினரின் 'வாட்டர் ஜெட்' படகு ஒன்றை தாக்கி அழித்ததாகவும் புலிகளின் குரல் வானொலி நேற்றிரவு அறிவித்துள்ளது. [வ]

## மின்மாற்றி தகர்ப்பு

(திருமலை)

திருகோணமலை அறப்புக்கல்லுச் சந்தியில் இருந்த மின்மாற்றி ஒன்று நேற்று இனந்தெரியாதவர்களால் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டுள்ளது,

6 இலட்சம் ரூபா பெறுமதியான இம் மின்மாற்றி தகர்ப்பினால் சுமார் 350 குடும்பங்கள் பாதிக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. [ச]

## ஆலயதுப்பரவுப் பணிக்கென புதிய வண்டி

இணுவில் ஸ்ரீபரராஜசேகரப்பிள்ளையார் கோவில் துப்பரவுப் பணியை மேற்கொள்ள இணுவிலூர் இளைஞர்களால் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான வண்டியொன்று புதிதாக அமைக்கப்பட்டுள்ளது.

(உ)

**சக்தி---**

வெடித்துள்ளது.

இக்குண்டு வெடிப்பை அடுத்து அங்கு பல்லாயிரக்கணக்கில் திரண்டிருந்த இரசிகர்கள் கூட்டம் நாலாபுறமும் சிதறியதாக தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்தவர்கள் திருகோணமலை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

**வயோதிபப் . . .**

தாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஹர்த்தால் நடவடிக்கையில் சிலர் ஈடுபட்டிருந்த வேளை ஏற்பட்ட ஓர் அசம்பாவிதத்தின் போதே இவ் வயோதிபப் பெண் காயமடைந்ததாகவும் தெரியவருகிறது.

**ஆயர். . .**

கள் யுத்தக் கைதிகள் தொடர்பாக அரசின் நிலைப்பாடு பற்றி புலிகளைச் சந்தித்து பேசுவார்கள் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. (வ)

**சாவகச்சேரி . . .**

டும் எனக்கேட்டுக்கொண்டதையடுத்து நிலையங்கள் திறக்கப்பட்டன எனவும் அறியப்படுகின்றது. (வ-77-21)

**எப்பகுதி . . .**

பெரும் பங்காற்றியுள்ளார்கள்.

இவ்வாறு நேற்று யாழ். செயலகம் முன்பாக நடைபெற்ற பிரார்த்தனை நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய அருட்தந்தை பேனாட் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது,

எமது போராட்டம் பிச்சை எடுப்பதல்ல உரியதை உரியவர்களிடம் இருந்து கேட்பது தான் எமது போராட்டம் என்று கூறியதுடன் இனிமேல் எங்கு இப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்பட்டாலும் நாம் சொல்லாமலேயே மக்களை அவர்கள் விரும்பிய இடங்களுக்குச் செல்ல தடை விதிக்கக் கூடாது என்று இராணுவ அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுப்பதாகவும் தெரிவித்தார்.

அங்கு உரையாற்றிய சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான அமைப்பின் தலைவர் எஸ் பரமநாதன் சர்வதேச இந்து மத குருமார் ஒன்றிய செயலாளர், இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சார்பில் பஞ்சலிங்கம் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். [வச 312]

**புலிகள்----**

★ 2ம் லெப் மணி
[சுப்பிரமணியம் இந்திராணி)
யாழ்ப்பாணம்

★ 2ம் லெப். உதயா/நிர்மதி
(கணபதிப்பிள்ளை ஜெயசுதா
மன்னார்.

வீரவேங்கைகளான

★ பூவிழி
[நாகலிங்கம் பிறேமலதா]
யாழ்ப்பாணம்

★ மைதிலி
[பாலசுப்பிரமணியம் வசந்தகுமாரி]
யாழ்ப்பாணம்.

★ சுமி
[கந்தையா உமாவல்லி
யாழ்ப்பாணம்.

★ காந்கருபன்
[செல்வரெட்ணம் யோகநாதன்) யாழ்ப்பாணம்

★ ஆருரன்/தமிழரசன்
[ராமச்சந்திரன் செல்வராஜ்
வவுனியா

★ தூயகலை
[குமாரவேல் சந்திரகலா]
கிளிநொச்சி

★ துரைஅரசி/ மயூரி
(நந்தகோபால் நந்தினி)
வவுனியா

★ மணிஇழை/அருள்மொழி
(செல்வநாயகம் கவிதா
யாழ்ப்பாணம்

★ மாங்குயில்
(செல்லத்துரை விஜயகுமாரி)
மணலாறு

(ந-07)

**ஹர்த்தால்---**

சேரி, திருநெல்வேலி, இருபாலை ஆகிய இடங்களில் ஹர்த்தால் ஒழுங்குகளை கவனிக்கச் சென்றபோதே இவர்கள் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பாக அருட்தந்தை பேனார்ட் கேணல் ஜெயதிலகவுடன் தொடர்பு கொண்டு கைது செய்யப்பட்டவர்களை விடுவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது [வ 123]

**உணர்வு . . .**

நோயாளிகள் எண்ணிக்கையும் குறைவாகவே காணப்பட்டது,

சுன்னாகம், மருதனார் மடம், திருநெல்வேலி மத்திய சந்தைகளும் நேற்று முழுமையாக இயங்கவில்லை என்றும், நேற்று பிற்பகல் 3 மணிக்குப் பின் யாழ்நகரில் நடைபாதை வணிகர்கள் வியாபாரத்தை ஆரம்பித்ததாகவும் பெருமளவு மக்கள் உடுபிடவைகள் அலுவலகப் பொருள்களை கொள்வனவு செய்ததாகவும் எமது பிரதேச செய்தியாளர்கள் அறிவிக்கிறார்கள். (வ-3-12)


இன்று மலரும் சித்திரைப் புத்தாண்டில்
மங்களம் பெருக எமது
★ வாடிக்கையாளர்கள்
★ அன்பர்கள்
★ ஆதரவாளர்கள்
அனைவர்க்கும் எமது நல்வாழ்த்துக்கள்

ஜெசிபா ஏஜன்சி
JEISHEBA AGENCY
132, STANLEY ROAD, JAFFNA.
(கி-218)

தேரேறி அருள்பாலிக்கும் மருதடியாள்
பாதக்கமலத்தை சிரம்தாழ்த்தி கரம்கூப்பி வணங்கி
எமது ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவர்க்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகுக.

குலம் கிறீம் ஹவுஸ்
ஆஸ்ப்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
கிளை ஆறடிச்சந்தி மானிப்பாய்.
(கி-249)

எமது அன்பர்கள் ஆதரவாளர்கள் வாடிக்கையாளர்
அனைவருக்கும் இன்றைய சித்திரைப் புத்தாண்டில்
தேரேறி அருட்கடாட்சம் சொரியும்
அத்தியடி வீரகத்தி விநாயகர் அருள்பெற்று
வாழ வாழ்த்துகிறோம்.

அல்டி
ரீ.வி, டெக், மணிக்கூடு, அன்ரனா, றேடியோ
கசற், மின்சாரப் பொருட்கள் விற்பனையாளர்.
மின்சாரநிலைய வீதி,
நவீன சந்தைக்கு முன்பாக,
யாழ்ப்பாணம், (சி-242)

உ
புத்தாண்டில் வாத்ஸல்ய வாழ்த்துக்கள்
ஒற்றுமையே பலம்

வண்டமிழர் வாழ்வில் வளம் சேர்ந்திடும் தீந்தமிழ் நாள் புத்தாண்டு. கூட்டுறவு நாட்டுயர்வு என செப்புவோம், மொழிவோம், புகழ்ந்துரைப்போம். மனிதாபிமானம் பேணி, நன்நெறி, எழுச்சி, பேராற்றல் மிக்க தமிழர் மாட்சி பேணுவோம் இனம், மதம் என குறுகிய வட்டம் விலகி மனிதாபிமானம் காப்போம், ஒன்றுபட்ட வாழ்வில் ஏற்றம் காண்போம். களிபேருவகை கொள்வோம். கூட்டுறவுத்துறை என்ஞான்றும் மக்கள் நலன் காக்கும்

மக்கள் பணிக்காய்
தன்னை உளத்தூய்மையுடன் அர்ப்பணித்துள்ள
தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம்

புத்தாண்டுக்கான மலிவு விற்பனை
விஷேட தள்ளுபடியுடனான விற்றுத்தீர்த்தல்.
இல. 06 கஸ்தூரியார் வீதியில்
அமைந்துள்ள எமது மலிவு விற்பனை நிலையத்தில்
விஷேட தள்ளுபடியுடன் சகல பொருட்களையும்
பெற்றுக் கொள்ள முந்திக் கொள்ளுங்கள்.

மோகனம் ரெக்ரைல்ஸ்
கபிலா காலணியகத்திற்கு அருகாமையில்
இல. 06 கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.
நிரந்தர முகவரி
இல. 41 நவீன சந்தை, (உட்புறம்) யாழ்ப்பாணம்.
(கி/155)

மங்களகரமாள புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்வடைகிறோம்.
★ முத்திரைகள் ★ ஏரோகிராமஸ் ★ மணியோடர் ★ தபாற்கட்டளை உட்பட
உங்கள் தபாலக தேவைகள் யாவற்றையும் முழுமையாக பூர்த்தி செய்வோர்
★ நீதினி முகவர் தபாலகம் ★
டாக்டர் சுப்பிரமணியம் வீதி, பஸ்நிலையம் அருகில், சுன்னாகம்
கி - 252


இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரினால், இல, 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணஎனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆண்டுஏப்ரல் மாதம் 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.